


சைதை கிழக்குப் பகுதி 169–வது வட்டக் கழகச்செயலாளர் சைதை மு.இராஜா – பவானி ஆகியோரது மகன் இரா.எழின் – எம்.நமயோமி ஆகியோரது திருமணத்தை மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் நடத்தி வைத்தார். இம்மணவிழாவில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ்குமார், விஜய் வசந்த் எம்.பி., பகுதிச் செயலாளர்கள் – இரா.துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னணியினர் கலந்துகொண்டு வாழ்த்தினர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

# மும்பை புறநகர் மாநில ஆரே காலனி கிளைக்கழகம் நடத்துகிறது!

## செயலாளர் அலி ஷேக் மீரான் சிறப்புரை!

மும்பை, ஆக.22-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மேனாள் தலைவரும் தமிழினக் காவலருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது நூற்றாண்டு நிறைவு விழா வருகிற 25.08.2024 ஞாயிறு அன்று நடைபெறவுள்ளது. ஆரே காலனி பொறுப்பாளர் சிவகுமார் தலைமையில் மாலை சரியாக 6 மணியளவில் கண்பதி மண்டபம் யூனிட் எண்.7 ஆரே மில் காலனி, கோரேகாவ்ன் கிழக்கில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் கலைஞர் திருவுருவப் படத்தை அவைத் தலைவர் ஜேம்ஸ் தேவதாசன் திறந்து வைக்கிறார்.

மாநில செயலாளர் அலி சேக் மீரான் நூற்றாண்டு விழாப் பேருரை ஆற்றுகிறார்.

பொருளாளர் பி.கிருஷ்ணன், துணைச் செயலாளர்கள் வதிலை பிரதாபன், அ.இளங்கோ, மாநில இளை ஞரணி அமைப்பாளர் ந.வசந்தகுமார், தி.க. தலைவர் பெ.கணேசன், பகுத்தறிவாளர் கழகத்தலைவர் அ.இரவிச்சந்திரன், தி.மு.கழகப் பேச்சாளர் முகமது அலி ஜின்னா, தி.மு.கழகத் தொழில்நுட்ப அணி வே.சதானந்தன், இலக்கிய அணித் துணை அமைப்பாளர் வெ.அ. ஜைனுல்லாபுதீன், இளைஞரணி துணை அமைப்பாளர் இரா.கணேசன், இலக்கிய அணிப் புரவலர் எஸ்.பி.குமரேசன், டோம்பிவிலி கிளைக் கழகச் செயலாளர் வீரை சோ. பாபு, பொய்சர் மூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கவுள்ளார்கள்.

கல்யாண் க.ஜீவானந்தம், பீவாண்டிக் கிளைக் கழகச் செயலாளர் மெஹபூப் பாஷா, ஜோஹேஸ்வரி தமிழினநேசன், தானே கிளைச் செயலாளர் பாலமுருகன், முலுண்டு செயலாளர் பெருமாள், வாஷி கிளைக்கழகச் செயலாளர் பழனி, வாஷி கிளைக் கழகத் தோழர்கள் தில்லை, ஆறுமுகம், எம்.இ.முத்து, குலசேகரன் ஜி.பசுபதி நாதன்,

சயான் கிளைக் கழகச் செயலாளர் சி.சுடலையாண்டி, சீத்தாகேம்ப் கிளைக்கழகம் சார்பில் ஆழ்வார், ராஜேந்திரன், அந்தேரி மேற்கு எம்.பொன்மணி, ஒன்றியப் பிரதிநிதி, மற்றும் பல கழக உணர்வாளர்கள் நிகழ்வில் முன்னிலை வகித்துச் சிறப்பிக்கவுள்ளார்கள்.

நூற்றாண்டு விழாவிற்கான ஏற்பாடுகளை ஆரே காலணி கிளைக் கழக முன்னோடிகள் கு. தர்மலிங்கம், சு.சேகர் சுப்பையா, மா.துரைராஜன், அ.கணகராஜ், அ.சேகர் அய்யாச்சாமி, செ.துரை, பி.கட்டிமுத்து, ப.கணேசன் ராஜன், அ.பாண்டு, வீ.கே.சிவா, வீ. முனியன், அ.தமிழ்செல்வன், இல.ராசாங்கம், மு. கோவிந்தராஜ் ஸ்டீபன் டேவிட் ஆகியோர் சிறப்பாக செய்து வருகிறார்கள்.

அனைவரும் நிகழ்வில் கலந்து மகிழுமாறு நிகழ்ச்சி எற்பாட்டாளர்கள் கேட்டுக் கொள்கிறார்கள்.

---

மதுரை மாநகர் 38 வது வட்டக் கழக முன்னாள் செயலாளர்

# பி.ஆர்.சி.ரமேஷ் இல்லத் திருமண விழா! அமைச்சர் பி.மூர்த்தி தலைமை!

## கோ.தளபதி - அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் - பொன்.முத்துராமலிங்கம் பங்கேற்பு!

மதுரை, ஆக. 22 -

புறநகர் கிளை தொ.மு.சா செயலாளர் முன்னாள் மதுரை மாநகர் 38. வட்டக் கழக செயலாளர் TNSTC முன்னாள் மாநகர் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் பி.ஆர்.டி. ரமேஷ் இல்ல திருமண விழா நாளை (23.08.2024 - வெள்ளிக்கிழமை) ஸ்ரீராம் மஹால் குலமங்கலம் மெயின் ரோடு, கோசா குளத்தில் நடைபெறுகிறது.

திருமணத்தை வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நடத்திவைக்கிறார்.

விழாவிற்கு கோ.தளபதி (சட்டமன்ற உறுப்பினர் மாவட் டக் கழக செயலாளர் மதுரை மாநகர்) முன்னிலை முனைவர் பி.டி,ஆர். பழனிவேல் தியாக ராஜன் ( தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்) ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் உயர்மட்ட செயல் திட்ட குழு உறுப்பினர் பொன். முத்துராமலிங்கம் மேயர் இந்திராணி பொன் வசந்த் . தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தமிழ்ச்செல்வன். தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி முருகன், ஏ கே எஸ் விஜயன், எம்பி தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி டி.க.எஸ். இளங்கோவன், மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ வேலுச்சாமி, மாநில தணிக்கை குழு உறுப்பினர் மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மாவட்டக் மணிமாறன். தமிழரசி ரவிக்குமார்.. சட்டமன்ற உறுப்பினர் ஆ வெங்கடேசன்.. சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வி பி கலைராஜன். மாநில இலக்கிய அணி அமைப்பாளர் எம் ஜெயராம். தலைமை செயற்குழு உறுப்பினர் தனச்செல்வம்.. தலைமை செயற்குழு உறுப்பினர் பெ. குழந்தை வேலு.. உயர் நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் மா ஒச்சு பாலு.. மாவட்ட அவை தலைவர்

நேருபாண்டி .மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் சின்னம்மாள்.. மாவட்ட துணைச் செயலாளர் அதனை செந்தில்குமார். மாநில மாணவரணி துணை செயலாளர் ஜேமூவேந்திரன்.. மாவட்ட துணைச் செயலாளர் சரவணன். பகுதி செயலாளர் சிம்மக்கல் எஸ் ஆர் கோபி ஜிபி ராஜா .மாநில இளைஞரணி துணைச் செயலாளர் மருது பாண்டியன். ஆனையூர் பகுதி கழகச் செயலாளர் மேலூர் அல் போன்ஸ். டி என் எஸ் டி சி தோமுசா பொதுச் செயலாளர் சேங்கை. மாறன் சிவகங்கை மாவட்ட துணைச் செயலாளர் சௌந்தர்ராஜன். மாநகர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மதி வெங்கடேஷ் . மாநகர் தி.மு.க. வரவேற்புரை இரா ரவீந்திரன்.. பொதுக்குழு உறுப்பினர் பொன் சேதுராமலிங்கம்.. பொதுக்குழு உறுப்பினர் மாவட்டக் கழக நிர்வாகிகள் பிடி மணிமாறன் . வைகை பரமன். முத்து கணேசன். செய்யது அபுதாகிர். ஆறுமுகம். விஜயலட்சுமி. பாண்டியன். செல்வம். கே பி பூமிநாதன்.

பகுதி கழக செயலாளர் புண்ணியமூர்த்தி. ராதாகிருஷ்ணன். அறிவு நிதி. குறும்பன். எஸ்.எஸ். மாறன். ஜீவன் பா.ரமேஷ் குமார், ஆர் எம் முத்து. கு காவேரி. போஸ் முத்தையா. எஸ்.வி.சுதன் மண்டல தலைவர்கள் சரவண புவனேஸ்வரி. எம் முகேஷ் சர்மா. வாசுகி சசிகுமார். பாண்டி செல்வி மிசா பாண்டியன். சுபிதா விமல்.

வட்டக் கழகச் செயலாளர்கள் வேலு. ஆர் ஆர் மகேந்திரன். பிஎம் மருது. மாதவன். ஆபித் .பவர் மணிகண்டன். முத்து மோகன். கருப்பு ராஜ். ரஞ்சித் குமார். காத்தவராயன். பவுன்ராஜ் .நல்ல காமன். மாயம் பெருமாள் .சுரேஷ். செல்வராஜ் .பிரேம் குமார் .ராஜேஷ் கண்ணா. ஆட்டோ சுரேஷ். கோசா குளம் முருகேசன். தவமணி. சீனி ரமேஷ். நாகஜோதி சிவா. சுரேஷ். ஜீன்ஸ் சிவா. காமராஜ் . ராஜேஷ். அசோக்குமார். செந்தில் குமார் .ரவிச்சந்திரன். விளாங்குடி தனசேகர். விளாங்குடி தேவராஜ். தஞ்சை மதி. அழகு சுந்தரம். யோகராஜ். ஆ ராம் பிரசாத் .ஏ கே செந்தில். பாலாஜி. பைபாஸ் பால சிவகுமார். இரா ராஜேந்திரன். ஓ வேல்முருகன்.

மாமன்ற உறுப்பினர்கள் விஜய மௌஸ் மீ. விஜயா குரு .மார்நாடு. கஜேந்திரன் .ஆழ்வார். முத்துமாரி. அந்தோணியம்மாள். பொன் வளவன். நாகநாதன் .முரளி கணேஷ். ஜெயராஜ். மகாலட்சுமி நவகோடி. நாகநாதன். லக்சிகா ஸ்ரீ. செல்வி கார்மேகம். பாண்டிச் செல்வி. ஜெகநாதன்.

அரசு வழக்கறிஞர்கள் வீர கதிரவன். பழனிச்சாமி. லிங்கதுரை R.M அன்பு நிதி .சிவக்குமார். ஜவகர். சாரங்கன். கருணாநிதி பன்னீர் செல்வம். முரளி.

TNSTC அரசு வழக்கறிஞர்கள் பாலமுருகன் ஜெகதீசன் நாகராஜன் ஹக்கீம், அணி அமைப்பாளர்கள் துரை கோபால்சாமி. கண்ணன். வெள்ளத்துரை. முனியசாமி. பா மணிகண்டன். கந்தசாமி(எ) செல்வம் காமாட்சி. ராஜா. வினோத் பாலா செல்லப் பாண்டி. M. ராம் பிரசாத் தமிழ் சந்திரன். ராஜா. மணி புல்லட் மணி .சந்தான பாண்டியன் .சித்திக் அமீன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

பி.எம்.ராஜரத்தினம் எஸ்.எம்.ரபீக் புதூர் முத்துராமன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.




திருவள்ளூர் மேற்கு மாவட்டம் ஆர் கே பேட்டை மேற்கு ஒன்றியம் அம்மையார் குப்பம் கிளைக் கழக செயலாளரும் கழக மூத்த முன்னோடி அண்மையில் ஏற்பட்ட விபத்தில் கால் முறிவு ஏற்பட்டு அவரது இல்லத்தில் ஓய்வு பெற்று வரும் நிலையில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ நேரில் சென்று நலம் விசாரித்து மருத்துவ சிகிச்சைக்காக நிதி உதவி வழங்கினார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் சி.என்.சண்முகம், ஒன்றிய குழு துணை தலைவர் திலகவதி ரமேஷ், அம்மையார்குப்பம் ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்த் செங்குட்டவன், மற்றும் மோனிசா சரவணன், உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

---

இன்று (ஆகஸ்ட்-22) சென்னை தினம்

# கலைஞரின் சென்னை!




ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால், சென்னையின் அடையாளங்களில் ஒன்றாக கைரிக்ஷாக்கள் இருந்ததை நினைவு கூரும் ஆங்கில நாளேடுகள், மற்றுமொரு தகவலையும் சொல்லி முடிக்கத் தவறுவதில்லை. அது, 1973-ல் அப்போதைய தமிழ்நாடு முதல்வர் கலைஞரால் கைரிக்ஷாக்களுக்கு மாற்றாக சைக்கிள் ரிக்ஷாக்கள் அளிக்கும் திட்டம். மனிதர்களை மனிதர்களே இழுத்துச் சென்ற அந்தக் கொடுமைகள் இன்று சென்னையின் பழைய புகைப்படங்களில் மட்டுமே பார்க்கக் கிடைக்கின்றன.

ஆண்டுகள்தோறும் வளர்ச்சியின் பாதையில் விரைந்துகொண்டிருக்கும் சென்னை மாநகரத்தின் பிரதான கட்டமைப்புகளில் கலைஞரின் பெயரும் சேர்ந்தே ஒளிர்கிறது. சென்னையில் கைரிக்ஷாக்கள் ஒழிக்கப்பட்ட அதே 1973-ம் ஆண்டில்தான்அண்ணாமேம்பாலம்திறந்துவைக்கப்பட்டது. அண்ணா சாலையில் உத்தமர் காந்தி சாலை, கதீட்ரல் சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ள இந்தப் பாலத்துக்கு 1971- செப்டம்பர் 1-ல் முதலமைச்சர் கலைஞரால் அடிக்கல் நாட்டப்பட்டு 21 மாதங்களில் பணி முடிக்கப்பட்டு, 1973 ஜூலை 1 அன்று திறக்கப்பட்டது. திறக்கப்பட்ட நாட்களில், இந்தியாவிலேயே மூன்றாவது பெரிய மேம்பாலமாக அது இருந்தது. சென்னையின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே மேம்பாலம் கட்டிய கலைஞர், மெட்ரோ ரயில் திட்டத்தையும் தொடங்கிவைத்தார். 2006-ல் அவர் தொடங்கிவைத்த மெட்ரோ ரயில் திட்டம்தான் 2015 முதல் செயல்பாட்டுக்கு வந்தது.











பொதுப் போக்குவரத்து மட்டுமில்லை, சென்னையின் பண்பாட்டு அடையாளங்களாக விளங்கும் பல்வேறு கட்டடங்கள் அவரது எண்ணத்தில் உதித்தவைதான். திருவள்ளுவரின் நினைவைப் போற்றும்வகையில் 1973-ல் அவர் அடிக்கல் நாட்டிய வள்ளுவர் கோட்டம், 1976-ல் பணி நிறைவுபெற்றது. சென்னையில் ஒரு தகவல்தொழில்நுட்பப் பூங்காவை உருவாக்க வேண்டும் என்று கனவு கண்ட கலைஞர், 2000-ல் அதைச் சாத்தியப்படுத்தினார். கோட்டூர்புரத்தில் கலைஞர் நிறுவிய அண்ணா நூற்றாண்டு நூலகம், சிங்கப்பூர் நூலகத்தை முன்மாதிரியாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டது. எட்டு ஏக்கர் பரப்பளவில் எட்டு மாடிக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் இந்நூலகம் 5,000 பேர் படிக்கும் வசதியைக் கொண்டது.









அரசினர் தோட்டத்தில், கலைஞர் கட்டி முடித்த புதிய தலைமைச் செயலகக் கட்டடம் அரசியல் காழ்ப்புணர்ச்சிகளால் மருத்துவமனை வளாகமாக மாற்றப்பட்டுவிட்டது. பொது வளாகம், சட்டமன்ற வளாகம், நூலக வளாகம், முதல்வர் வளாகம், தலைமைச் செயலகம் என்று ஐந்து பிரிவுகளாகத் திட்டமிட்டு கட்டப்பட்டது இந்த வளாகம். உலகின் முதலாவது பசுமை சட்டமன்றக் கட்டடமாகப் பெயர்பெற்ற இது தற்போது பல்நோக்கு மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது.

போக்குவரத்து வசதிகளும், கட்டடங்களும் மட்டும்தானா ஒரு மாநகரின் வளர்ச்சி? வேலை வாய்ப்பு தேடி மாநகரில் தஞ்சமடையும் உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு ஒரு கண்ணியமான வாழ்விட வசதியும் உறுதிசெய்யப்படுவதுதானே ஒரு மாநகரின் அழகு? உலகம் முழுக்கவும் மாநகரங்கள் எதிர்கொண்டிருக்கிற பெருஞ்சிக்கல் இந்த குடிசைப் பகுதிகள்தான். சென்னையும் அதற்கு விதி விலக்கல்ல. 1970-ல் அன்றைய முதல்வர் கலைஞரால் குடிசை மாற்று வாரியம் தொடங்கப்பட்டது. அதற்கடுத்த ஆண்டில் அதற்குத் தனிச்சட்டமும் இயற்றப்பட்டது. தற்போது 'நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்' என்று அதற்குப் புதிய பெயர் சூட்டப்பட்டுள்ளது.

1971 அக்டோபரில் அன்றைய சைதைத் தொகுதியில் கலைஞர் கருணாநிதி நகர்' புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கான திட்டத்துக்கு கலைஞரால் அடிக்கல் நாட்டப்பட்டது. அதே அக்டோபர் மாதத்தில், திருவல்லிக்கேணி லாக் நகர்ப் பகுதி, சேத்துப்பட்டு மீனாம்பாள் சிவராஜ் நகர் என்று பல இடங்களில் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புத் திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டு விழாக்கள் நடந்தன. அன்றைய முதல்வர் கலைஞரால் முழுவீச்சில் செயல்படுத்தப்பட்ட குடிசை மாற்று வாரியம் மாநகரத்தின் கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை உருவாக்கியிருக்கிறது. மாநகரத்தின் அதிவேக வளர்ச்சிக்கேற்ப

அதன் உட்கட்டமைப்பு வசதிகளும் உழைப்பாளர்களின் உறைவிட வசதிகளும் மேம்பட வேண்டும். கலைஞரின் ஆட்சியில் இதற்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. இன்று கொண்டாடப்படும் சென்னை தினத்தில், இந்நகரின் வளர்ச்சிக்காகப் பெரும்பங்காற்றியகலைஞரும்நினைவுகூரப்பட வேண்டியவராக இருக்கிறார்.

**-செ.இளவேனில்**



தமிழனத்தின் தலைமகன் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு, திமுக பொறியாளர் அணி சார்பில் நடைபெற உள்ள, கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவின் அழைப்பிதழை, பொறியாளர் அணியின் மாநில துணை செயலாளர் நரேந்திரன், சென்னை மேற்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் அண்ணாநகர் ச.அசோக்குமார் ஆகியோர், சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசுவை நேரில் சந்தித்து வழங்கினார்கள்.